தேதி.03.07.2025

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.12/2020- திரு.குமார் (எ) உத்திரகுமாரசாமி, த/பெ.கொண்டத்து கவுண்டர் - வா.சா.1**

**வா.சா.1:சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது தகப்பனார் சொத்து சம்பந்தமாக கோபி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அதில் இந்த பிரதிவாதிக்கு பங்கு உள்ளது என தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அதற்கு நாங்கள் மேல்முறையீடு செய்துள்ளோம். பிரதிவாதி கோபி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2ஆன செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எல்லாம் சரியானது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3ஆன கிரைய ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எல்லாம் சரியானது என்றால் சரிதான். நான் செல்லாது என்று சொல்லியுள்ள தாவா சொத்தானது பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அவர்கள் வற்புருத்தி வாங்கிய சொத்தாகும். பிரதிவாதியானவர் என் தாய் தந்தையருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளதால் அந்த தீர்ப்பின் படி பிரதிவாதி பலன் அடையக்கூடாது என்பதால் வா.சா.ஆ.3ஐ வற்புருத்தி எழுதிக்கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் கோபி நீதிமன்றத்தில் தீர்ப்பு வருவதற்கு முன்னரே இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். என் பெயரில் பவானிசாகர் காவல் துறையினர் ஆள்மாறாட்டம் செய்து ஆவணம் தயார் செய்து என்று என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அது பொய் புகாராகும். வா.சா.ஆ.3வது

ஆவணத்தில் உள்ள சொத்தானது பிரதிவாதியின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து, எழுதிக்கொடுத்த சொத்து, பிரதிவாதியின் சொத்து ஆகியவைகள் எல்லாம் எந்தப்பயனும் இல்லாமல் தரிசாகத்தான் உள்ளது என்றால் சரிதான். நானும், எனது குடும்பத்தாரும் உண்மையாக கிரையம் செய்து கொடுத்துவிட்டு, கிரிமினல் வழக்கில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கின் வழக்குரையில் பிரதிவாதி வற்புருத்தி தான் சொத்தை வாங்கினார் என்று குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அதனால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.03.07.2025